இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 24-10-2024

# மதச்சார்பின்மையை வலியுறுத்திய உச்சநீதிமன்றம்!

“மதச்சார்பின்மை என்பது இந்திய அரசியலமைப்பின் அடிப்படை உறுப்பு ஆகும்” என்று உச்சநீதிமன்ற அமர்வு சொல்லி இருக்கிறது. மதச்சார்பின்மை என்பது வெளிநாட்டுச் சரக்கு என்று சொல்லித் திரிபவர் இந்தத் தீர்ப்பைக் கவனிக்க வேண்டும்.

சுப்ரமணிய சுவாமி, உச்சநீதிமன்றத்தில் மதச்சார்பின்மைக்கு எதிராக ஒரு வழக்கை தாக்கல் செய்திருந்தார். மதச்சார்பின்மை, சோசலிசம் ஆகிய சொற்களை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் இருந்து நீக்க வேண்டும் என்பதுதான் அவரது கோரிக்கை. அவரைப் போலவே பல்ராம் சிங், அஸ்வினி குமார் ஆகியோரும் இதே கோரிக்கையை வைத்திருந்தார்கள்.

“இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்ட போது, ‘இந்தியா ஒரு சோசலிச, மற்றும் மதச்சார்பற்ற நாடு’ என்ற வார்த்தைகள் இடம்பெறவில்லை. ஆனால் இடையில் இந்த சொற்கள் சேர்க்கப்பட்டுள்ளது. 1976 ஆம் ஆண்டு செய்யப்பட்ட 42 ஆவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின் மூலமாக இதனைச் சேர்த்துள்ளார்கள். எனவே மதச்சார்பின்மை, சோசலிசம் ஆகிய இரண்டு சொற்களையும் நீக்க வேண்டும்” என்பதுதான் இவர்களது கோரிக்கை ஆகும். இந்த வழக்கை உச்சநீதிமன்ற நீதிபதிகள் சஞ்சீவ் கண்ணா, சஞ்சய் குமார் அமர்வு விசாரித்தது. நீதிபதிகள் மிகத் தெளிவாக தங்களது கருத்துகளைச் சொல்லி இருக்கிறார்கள்.

“திருத்தத்தின் மூலமாகச் சேர்க்கப்பட்ட சொற்கள், தனித்தனியாக அடைப்புக்குறிக்குள் தான் சேர்க்கப்பட்டுள்ளன. எனவே இவை 1976 ஆம் ஆண்டு சேர்க்கப்பட்டவை என்பது மக்களுக்குத் தெளிவாகத் தெரியும். மதச்சார்பற்ற, சோசலிச என்ற சொற்களோடு தேசத்தின் ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகிய சொற்களும் சேர்த்துத்தான் சேர்க்கப்பட்டுள்ளன. ஏன் இதனை மட்டும் எதிர்க்கிறீர்கள்?” என்று நீதிபதிகள் கேள்வி எழுப்பி உள்ளார்கள். “இந்தியா மதச்சார்பற்ற நாடாக இருப்பதை நீங்கள் விரும்பவில்லையா?” என்றும் நீதிபதிகள் கேட்டுள்ளார்கள்.

**“மதச்சார்பின்மை என்பது இந்திய அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பில் ஒரு பகுதியாகும். உச்சநீதிமன்றத்தின் பல தீர்ப்புகள் மதச்சார்பின்மையின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன. அரசியலமைப்புச் சட்டம் முன் வைக்கும் சமத்துவம், சகோதரத்துவம், உரிமைகளை ஒருவர் உற்று நோக்கினால் அவற்றில் மதச்சார்பற்ற நிலை முக்கியமான கருதுகோளாக இருப்பதை தெளிவாகக் காணமுடியும்” என்று மிகத் தெளிவாகக் குறிப்பிட்ட நீதிபதிகள் சோசலிசம் பற்றியும் தெளிவுபடுத்தினார்கள். “சோசலிசம் என்பது சமத்துவம் ஆகும். இந்த நாட்டின் செல்வம் சமமாகப் பங்கிடப்பட வேண்டும் என்பது ஆகும். இவை அனைத்துக்கும் மேற்கத்திய நாடுகளின் பொருளை எடுத்துக் கொள்ளத் தேவையில்லை” என்றும் நீதிபதிகள் சொல்லி இருக்கிறார்கள்.**

இந்த வழக்கின் மீதான விசாரணை நவம்பர் 18 அன்று நடக்க இருக்கிறது. என்றாலும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் மதச்சார்பின்மை, சோசலிசம் ஆகிய இரு சொற்களுக்கும் மிகத் தெளிவான விளக்கங்களைச் சொல்லியதன் மூலமாக இந்நாட்டு மக்களுக்கு வெளிச்சமான பாதையைக் காட்டி இருக்கிறார்கள்.

**வகுப்புவாத அரசியலை நடத்தி, மக்களின் மன உணர்வுகளைத் தூண்டி குளிர் காய நினைக்கும் பா.ஜ.க., தனது அரசியல் வெற்றியின் மூலமாக இந்திய அரசை வகுப்புவாத அரசாக மாற்றத் துடிக்கிறது. அதன் விளைவுதான் இதுபோன்ற வழக்குகள். ‘மதச்சார்பின்மை என்பது ஐரோப்பிய இறக்குமதி’ என்று பிரச்சாரம் செய்வதும் இதனால் தான்.**

**இந்திய நாட்டின் ஒற்றுமையை உருவாக்கிய தலைவர்கள் அனைவரும், ‘நாட்டு மக்கள் அனைவரும் ஒன்று. அனைவரும் இந்தியர்கள்’ என்ற இந்திய தேசியத்தை உருவாக்கினார்கள். இதனை மையமாக வைத்தே, பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்தார்கள். ‘இந்திய நாட்டில் அன்னியர் புகலென்ன நீதி?’ என்று கேட்டார்கள். இத்தகைய சுதந்திர உணர்ச்சி தலைதூக்கி இந்தியா முழுக்க சுதந்திரப் போராட்டம் நடைபெற்ற நேரத்தில் அதனைச் சிதைக்கும் வகையில் இந்தியாவில் இரு தேசியங்கள் இருப்பதாகச் சொன்னவர் தான் சாவர்க்கர்.**

இந்துக்களையும், இசுலாமியர்களையும் இரு தேசியங்கள் என்று சொல்லி பிரிவினையை உருவாக்கினார் சாவர்க்கர். அதனைத் தான் இன்று வரையிலும் பா.ஜ.க.வினர் செய்து வருகிறார்கள். இரு தேசியங்கள் இந்தியாவில் இருக்கிறது என்று சாவர்க்கர் சொன்ன போது, ‘இரு தேசிய இனங்கள் எனும் கொள்கை பொய். இந்திய இந்துக்களும், முசுலீம்களும் வேறுவேறு இனமல்ல’ என்றவர் காந்தி.

“இந்தியாவில் இந்துக்கள் மட்டுமே இருக்க வேண்டுமென்று இந்துக்கள் கருதினால் அவர்கள் கனவு காண்பவர்கள் ஆவார்கள். இந்தியாவைத் தங்கள் தாய் நாடாக்கிக் கொண்ட இந்துக்களுக்கும், முகமதியர்களுக்கும், பார்சிகளும், கிறிஸ்தவர்களும் சகோதரர்கள் ஆவார்கள்” என்றவர் அவர். ‘மதவாத எண்ணம் தோன்றினால் நாடு விஷம் வழிந்தோடும் தேசம் ஆகிவிடும். ஆனால் நான் கனவு காணும் நாடு அன்பு நதிகள் வழிந்தோடும் நாடாகும்’ என்றவர் காந்தி. ஆனால் விஷம் வழிந்தோடும் தேசமாக மாற்றும் முயற்சிகளைத் தான் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு அரசியலமைப்புச் சட்டம் தடையாக இருக்கிறது. மதச்சார்பின்மை, சோசலிசம், சமத்துவம், உரிமைகள், சகோதரத்துவம் ஆகிய சொற்கள் இடைஞ்சலாக இருக்கிறது.

**இப்படிப்பட்ட ஆயிரம் தடைகளை உடைத்து விட்டு கம்பீரமாக எழுந்து நிற்பதுதான் இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஆகும். அது சட்டம் மட்டுமல்ல, இந்திய நாட்டு மக்களின் குணமாக, பண்பாடாக இருக்கிறது. இந்தியப் பண்பாடு தான், இந்தியச் சட்டமாக ஆகி இருக்கிறது. அதனை எத்தனை ஆண்டுகள் ஆனாலும் எந்தச் சக்தியாலும் வீழ்த்த முடியாது. சிதைக்கவும் முடியாது என்பதே உண்மை.**

## 2023 - 24 ஆம் ஆண்டில் ரூ.13,000 கோடி வேளாண் பொருட்கள் ஏற்றுமதி

# விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை!

## வேளாண் ஏற்றுமதிக் கருத்தரங்கில் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேச்சு!

கடலூர், அக்.24-

கடலூர் மாவட்டம் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மாநில அளவிலான வேளாண் ஏற்றுமதி கருத்தரங்கினை துவக்கி வைத்தார்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை அரசு முதன்மைச் செயலாளர் ஜி.பிரகாஷ் ஆகியோர் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன் ஆகியோர் முன்னிலையில் நேற்று (23.10.2024) கடலூர் மாவட்டம், வடலூர் தனியார் திருமண மண்டபத்தில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி மற்றும் அரியலூர் ஆகிய மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் வேளாண்மை விளை பொருட்களுக்கான ஏற்றுமதி மேம்பாட்டு கருத்தரங்கினை துவக்கி வைத்தார்.

இக்கருத்தரங்கில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் விவசாயிகள் தங்களது விளைப்பொருட்களை விற்பனை செய்வதற்கு அனைத்து வசதிகளையும் அரசின் மூலம் செய்துதர வேண்டும் என்பதற்காக பல்வேறு திட்டங்களை ஏற்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் உற்பத்திப் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு வசதியாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கருத்தரங்கம் அனைத்து மாவட்ட விவசாயிகளுக்கும் நடத்தப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி மற்றும் அரியலூர் ஆகிய மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் வேளாண் ஏற்றுமதி ஊக்குவிப்பு தொடர்பான மாநில அளவிலான வேளாண் ஏற்றுமதி கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

இதன் மூலம் விவசாயிகள் தங்களது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் முதலாளியாக மாற்றும் திட்டத்திற்கு வலுசேர்க்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட பருவ காலத்தில் விளைச்சல் அதிகமாகும் போது ஏற்படும் விலை வீழ்ச்சியினை கட்டுப்படுத்திட அவற்றினை மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களாக பல்வேறு வகையிலான பொருட்களாக தயார்செய்து விற்பனை செய்ய இக்கருத்தரங்கம் வாயிலாக விளக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வேளாண் ஏற்றுமதியில் இந்தியா முக்கிய பங்கு வகிக்கின்றது. வேளாண் பொருட்களின் ஏற்றுமதியில் இந்தியா 10வது இடம் வகிக்கின்றது. இந்தியாவின் ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்கு 6.5 சதவீதமாகும், தமிழ்நாட்டிலிருந்து 2022 23 ஆம் ஆண்டில் 24.5 இலட்சம் டன் பொருட்கள் ரூ.12 ஆயிரம் கோடி மதிப்பிலும் மற்றும் 2023 - 24 ஆம் ஆண்டில் 25.15 இலட்சம் மெட்ரிக் டன் பொருட்கள் ரூ.13 ஆயிரம் கோடி மதிப்பிலும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.



வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கடலூர் மாவட்டம், வடலூரில் வேளாண் விளை பொருட்களுக்கான ஏற்றுமதி மேம்பாட்டு கருத்தரங்கினை நேற்று (23.10.2024) துவக்கி வைத்தார். உடன் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு.ஜி.பிரகாஷ், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார், , கடலூர் சட்டமன்ற உறுப்பினர் .கோ. ஐயப்பன் , வேளாண்மை துணை இயக்குனர் திருமதி பூங்கோதை உட்பட பலர் உள்ளனர்.

### முக்கிய ஏற்றுமதிப் பொருட்கள்!

ஏற்றுமதி சார்ந்த வர்த்தகத்தில் தமிழ்நாட்டைப் பொருத்தமட்டில் அரிசி, நிலக்கடலை, பதப்படுத்தப்பட்டபழங்கள், முந்திரி, மக்காச்சோளம், பதப்படுத்தப்பட்ட உணவுகள், வெள்ளரி மற்றும் மாம்பழச்சாறு ஆகியவை முக்கியமான ஏற்றுமதி பொருட்களாகும்.

மேலும், வெங்காயம், நாட்டு சர்க்கரை, மாவுவகைகள், காய்கறிகள், மலர்கள், பதப்படுத்தப்பட்ட காய்கறிகள் மற்றும் பால்சார்ந்த பொருட்களும் தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டிலிருந்து வங்காளதேசம், ஐக்கிய அரேபிய நாடுகள், அமெரிக்கா துணைக்கண்டம், சீனா, ஸ்ரீலங்கா, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

வேளாண் ஏற்றுமதியில் சிறப்பாக செயல்படும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் ரூ.2.00 லட்சம் பரிசுத்தொகை வழங்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கான உலகளாவிய சந்தை வாய்ப்புகள், அவற்றின் தர நிலைகள் மற்றும் ஏற்றுமதி நடைமுறைகள் பற்றிய தகவல்களை விவசாயிகள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் பெறும் வகையில் வேளாண் ஏற்றுமதி சேவை மையம் ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் சென்னையில் நிறுவப்பட்டுள்ளது.

### புவிசார் குறியீடு!

புவிசார் குறியீடு பெறப்பட்ட பொருட்களை சந்தைப்படுத்துவதால் அதன் தேவை மற்றும் ஏற்றுமதி அளவை அதிகரிக்கலாம். இதனை கருத்தில் கொண்டு மாநிலத்தின் தனித்துவமான 35 வேளாண் பொருட்களுக்கு புவிசார்குறியீடு பெறும் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. சோழவந்தான் வெற்றிலைக்கு புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளது. இதர வேளாண் விளை பொருட்களுக்கு விரைவில் புவிசார் குறியீடு பெறப்பட உள்ளது.

வேளாண் விளை பொருட்களை சுத்தப்படுத்தி வகைப்படுத்துவதன் மூலம் சந்தை வாய்ப்பினை அதிகரித்து விவசாயிகளுக்கு அதிக இலாபம் ஈட்டித்தரும் நோக்குடன் 64 முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் 20 முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உணவு பதப்படுத்தும் தொழில் முனைவோர்களை உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைக்க ஊக்குவிக்கும் பொருட்டு திருநெல்வேலி மாவட்டம் கங்கை கொண்டானில் 50 ஏக்கர் பரப்பளவில் பெரிய அளவிலான உணவுப் பூங்காவும் மற்றும் தேனி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, சேலம், கடலூர் மற்றும் மதுரை ஆகிய 7 மாவட்டங்களில் 10 ஏக்கர் பரப்பளவில் சிறிய அளவிலான உணவுப் பூங்காக்களும் அமைக்கப்பட்டு, உணவு பதப்படுத்தும் தொழில் முனைவோர்களுக்கு தேவையான கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

பல்வேறு திட்டங்களின் மூலம் உற்பத்தியை அதிகரிக்க அரசு தொடர்ந்து முயற்சிகள் மேற்கொண்டாலும், இந்தத் திட்டங்களை செயல்படுத்துதல், உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்களை சந்தைப்படுத்துவதன் மூலம் விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களின் வருமானத்தை அதிகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இக்கருத்தரங்கில், பயின்ற வழிமுறைகளை கொண்டு அனைத்து மாவட்டங்களிலுள்ள விவசாயிகள், அந்தந்த பகுதிகளில் விளையும் பொருட்களை மதிப்புக்கூட்டி ஏற்றுமதி செய்ய புதிய சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தி அவர்களின் வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஏற்றுமதியினை ஊக்குவிக்க 2024 - 25 ஆம் ஆண்டிற்கு வேளாண்மை நிதி நிலை அறிக்கையில் சுவை மற்றும் மணமூட்டும் பொருட்களுக்கான ஏற்றுமதி குறித்த பயிற்சி மற்றும் உற்பத்தியாளர்கள் மற்றும் வணிகர்கள் இணைப்புக் கூட்டங்கள் நடத்த அறிவிப்பு வெளியிடப்பட்டு, ஈரோடு மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் நடத்தப்பட்டுள்ளன.

மேலும், 20242025 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில், விவசாயிகள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் ஏற்றுமதி தொடர்பான சான்றிதழ்களை பெறும் பொருட்டு ஒரு விவசாயி/ உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு அதிகபட்சமாக ரூ.15,000/ வீதம் 100 நபர்களுக்கு ரூ.15 இலட்சம் வழங்குவதற்கான அறிவிப்பு அறிவிக்கப்பட்டு திட்ட செயலாக்கம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விவசாயிகள் இக்கருத்தரங்கினை நல்ல முறையில் பயன்படுத்தி உற்பத்திப் பொருட்களை பன்னாட்டு அளவில் சந்தைப் படுத்தி அதிக வருவாய் பெற்று பயனடைய வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் தெரிவித்தார்.

இக்கருத்தரங்கில் நீண்டகாலமாக வேளாண் துறையில் ஈடுபட்டு சிறந்த முறையில் அதிக மகசூல்களை விற்பனை செய்து கொண்டிருக்கும் முன்னோடி விவசாயிகள் பிற விவசாயிகளுக்கு தங்களது கருத்துகளை தெரிவித்தனர்.

இக்கருத்தரங்கில் மாநில அட்மா குழுத்தலைவர் வி.சிவக்குமார், வேளாண்துறை இணை இயக்குநர் கென்னடி ஜெபக்குமார், வேளாண்மை துணை இயக்குனர் திருமதி பூங்கோதை, வடலூர் நகர மன்ற தலைவர் சிவக்குமார், நபார்டு உதவி பொது மேலாளர் சித்தார்த், ஏற்றுமதி கடன் உத்தரவு கார்ப்ரேஷன் கிளை மேலாளர் திருமதி சாந்தினி, உட்பட பலர் கலந்து கொண்டனர்.



தலைமைச் செயலகத்தில் நேற்று (23.10.2024) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில் தமிழ் வளர்ச்சித் துறையில் 2024–25 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டுள்ள புதிய அறிவிப்புகள் மற்றும் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து துறை உயர் அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் எரி சாராயம் உள்ளிட்ட

# ஆல்கஹால் வகைகள் கட்டுப்படுத்துவதில் மாநில அரசுகளுக்கு அதிகாரம் !

## உச்சநீதிமன்றம் உத்தரவு!

புதுடெல்லி, அக்.24-

தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் எரி சாராயம் உள்ளிட்ட ஆல்கஹால் வகைகளை கட்டுப்படுத்துவதில் மாநில அரசுகளுக்கும் அதிகாரம் இல்லை என்று ஒன்றிய அரசு தெரிவித்திருந்தது. இதனை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு தலைமை நீதிபதி சந்திரசூட் தலைமையிலான 9 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வில் விசாரிக்கப்பட்டு வந்தது. இந்தநிலையில், வழக்கில் நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது. 8 நீதிபதிகள் ஒருமித்த தீர்ப்பு வழங்கினர். அதே நேரத்தில் ஒரு நீதிபதி மாறுபட்ட தீர்ப்பு வழங்கினார். 8 நீதிபதிகள் அளித்த ஒருமித்த தீர்ப்பில், ஆலைகளில் பயன்படுத்தப்படும் எரி சாராயம் உள்ளிட்ட ஆல்கஹால் வகைகளை கட்டுப்படுத்துவதில் மாநில அரசுகளின் அதிகாரத்தை பறிக்க முடியாது என்று தெரிவித்தனர்.

தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் எரி சாராயம் உள்ளிட்ட ஆல்கஹால் வகைகளை கட்டுப்படுத்துவதில் மாநில அரசுகளுக்கும் அதிகாரம் உள்ளது என்றும் நீதிபதிகள் கூறினர். ஆலைகளில் பயன்படுத்தும் எரி சாராயம் உள்ளிட்ட ஆல்கஹால் வகைகளை நச்சு சாராயம் என்று மாநில பட்டியலில் 2ல் கொண்டு வரலாம் என்று நீதிபதிகள் குறிப்பிட்டனர். தொழிற்சாலை சாராய வகைகளை கட்டுப்படுத்தும் அதிகாரம் ஒன்றிய அரசுக்கு மட்டுமே உள்ளது என்ற முந்தைய ஏழு நீதிபதிகள் அடங்கிய அமர்வு வழங்கிய தீர்ப்பை உச்சநீதிமன்றம் ரத்து செய்து உத்தரவிட்டுள்ளது.



சீறாப்புராணம் எழுதிய அமுதகவி உமறுப்புலவர் அவர்களின் 382வது பிறந்தநாளை முன்னிட்டு, தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் உள்ள அவரது மணிமண்டபத்தில் மரியாதை செலுத்தினார் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக்குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள். முன்னதாக, தூத்துக்குடி பாளையங்கோட்டை சாலையில், வ.உ.சி.கல்லூரி அருகில் தூத்துக்குடி மாநகராட்சி சார்பில் புதிதாக தொடங்கப்படவுள்ள பெண்களுக்கான பிரத்யேக பூங்கா (Pink Park) மற்றும் உடற்பயிற்சி கூடம் ஆகியவற்றை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். உடன், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளருமான பெ.கீதாஜீவன், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் இளம் பகவத், சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்கண்டேயன், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகராட்சி ஆணையர் இளம் பகவத் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.